1978 ஆகஸ்ட் 31]

காசி விசுவநாதர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள்.

* வினா 9— திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மேற்கு மாம்பலம் பகுதியிலுள்ள காசிவிசுவ நாதர் கோயிலுக்குச் சொந்தமான சுமார் 3 கிரவுண்டு நிலத்தை சில தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து உள்ளது அரசுக்குத் தெரியுமா—

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது ?

(முற்பகல் 9-30.)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) புறம்போக்கு நிலம் எனக் கருதி ஆக்கிரமித்தனர். பிறகு ஆலய நிலம் என அறிந்த பின் அவர்களே இடத்தைக் காலி செய்து விட்டதால் மேல் நடவடிக்கை மேற்கொள்ள இடம் இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, * * *

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கேள்வி நேரங்களில் குற்றச்சாட்டு அல்லது இம்புட்டேஷன்ஸ் அல்லது இன்ஃபரன்ஸ் கூடாது என்பது நம்முடைய விதிகளில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய துணைக் கேள்வியை உற்றுக் கவனித்தால் அதில் சொல்லக் கூடாத வார்த் தைகளையெல்லாம் சேர்த்துக் சொல்லியிருக்கிறார். இந்தக் கேள்வி நேரம் தகவலை அறியவும் அரசாங்கத்தின் விளக்கங்களை அறியவும் பயன்படுத்தப்பட்டால் நல்லது என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : பாய்ன்ட் ஆப் ஆர்டர்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் புருஷோத்த மனைப் பற்றி சொன்ன பொழுது திரு. ரகுமான்கானுக்கு இடமே இல்லை. தயவு செய்து அமருங்கள். அமைச்சர் பேசியது திரு. புருஷோத்தமனைப்பற்றி. தாங்கள் எழுந்திருக்க வேண்டிய அவசி யமேயில்லை.

THIRU A. RAHMAN KHAN : The contention is wrong. That is why I am raising a point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்குச் சம்பந்த மானது அல்ல. திரு. ரகுமான்கான், பற்றி இங்கே பிரச்னையே இல்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. புருஷோத்தமன் துணைக் கேள்வி போடும்போது இன்னும் காலி செய்யவில்லை, காலிசெய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதுதான் கேள்வியாக இருக்க வேண்டுமே தவிர, அதிலே பெரிய உரை நிகழ்த்தி, குற்றச்சாட்டுக்களைப் புகுத்துவது கேள்வி நேரத்திற்கு உகந்ததல்ல.

திரு. ப. பொன்னுரங்கம் : பாயின்ட் ஆப் ஆர்டர்.

MR. SPEAKER : There is no point of order during question hour. The hon. Member w ll please resume his seat.

அமைச்சர் எழுப்பியதற்கு நான் பதில் சொல்வதற்கு முன்னாலே தாங்கள் பேச எழுந்திருந்தால் எப்படி? தாங்கள் * * * என்றெல்லாம் பேசினீர்கள். திரு. புருஷோத்தமனை நான் நேரடியாக ஒன்றும் சொல்லவில்லை. எப்படிப் பேசவேண்டும், துணைக் கேள்விகள் எப்படி எழுப்ப வேண்டுமென்று சொல்வதும் உறுப்பினர்கள் தவறுகள் செய்தால் அதைச் சுட்டிக்காட்டுவதும் என்னுடைய கடமை. நீங்கள் எதையும் பேசிவிடலாம் என்றால் அதை அனுமதிக்க நான் இங்கே உட்கார்ந்திருக்கவில்லை. குறிப்பிட்டு, குற்றம் சாட்டுவது போல், * * * என்ற வார்த்தையை உபயோகிப்பது சரியல்ல. அவர் அவ்வாறு கேட்டதையெல்லாம் நீக்கவேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : *** இருப்பதை . . . . . (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து, உறுப்பினர் என்னிடம், நான் எப்படித் தீர்ப்பு கொடுக்க வேண்டுமென்று கூறுவது மரபல்ல. நான் சொல்வதை ஏற்றுக் கொண்டு அதற்கேற்றவாறு துணைக் கேள்வி போடுவதுதான் மரபு.

திரு. துரை முத்துசாமி : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் எழுப்பியதற்கு அந்த உறுப்பினர்தான் பதில் சொல்ல வேண்டும். நீங்கள் சொல்லக் கூடாது.

திரு. துரை முத்துசாமி : நான் அதைப்பற்றிக் கேட்கவில்லை. உறுப்பினர் சொன்னதற்கும், அமைச்சர் சொன்னதற்கும் நீங்கள் கொடுத்த ரூலிங்குக்கும் ஒரு பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள், இங்கே, இல்லாத ஒன்றைச் சொல்லக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

சத்யமேவ ஜயதே / வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1978 ஆகஸ்ட் 31]

அமைச்சர் சொன்னதற்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கும் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. இதிலே எது உண்மை என்று அறிவதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் தீர்ப்பளிக்க வேண்டும். அமைச்சர் இல்லையென்கிறார், உறுப்பினர் இருக்கிறது என்கிறார். ஆகவே எது உண்மை? உறுப்பினர் சொல்வதா? அமைச்சர் சொல்வதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்விகள் மறுபடியும் அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற பதிலைப் பொறுத்தது. அவருக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி இருக்கிறது அல்லது இல்லை என்பதைப் பொறுத்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்கின்ற கடமை இருக்கிறதே தவிர, இங்கேயே பிரச்சினையை முடிவெடுத்து உறுப்பினர்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. உறுப்பினர் பேசிய வார்த்தைகளைப் பயன்படுத்துவது எப்படி என்பதை நான் சொல்லுகின்றேனே தவிர, இந்தப் பிரச்சினையின் மீது முடிவெடுத்து இங்கேயே அவைக்குத் தெரிவிக்கவேண்டும் என்று அவசரப்பட்டு எடுக்கின்ற விஷயம் அல்ல. அது அவர்களின் நிலைமையைப் பொறுத்தது. சொல்வது அவர், கேட்பது இவர், இதற்கிடையிலே நடவடிக்கை எடுத்து அரசு அதைப் பற்றி ஆராயவோ, உள்ளே நுழையவோ, அவசியம் இல்லை. அவர் பேசிய வார்த்தைகள் சரியில்லை. புருஷோத்தமன் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம்: ரூலிங் மீது ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மன்றத்தின் மரபுப்படி ரூலிங் மீது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் புருஷோத்தமன் போட்ட துணைக் கேள்வியை நீங்கள் முழுவதும் நீக்க வேண்டும் என்று போட்ட உத்தரவை ஆட்சேபிக்க முன் வரவில்லை. உத்தரவை மறுபரிசீலனை செய்து, தாங்கள் சொல்வது போல குற்றச்சாட்டுள்ள பகுதியை மாத்திரம் நீக்கிவிட்டு துணைக் கேள்வியை அனுமதிக்கக் கேட்டுக் கொள்கிறேன். அல்லது அவருக்கு இன்னொரு வாய்ப்பு கொடுத்து துணைக்கேள்வியை கேட்க அனுமதிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நான் சொல்கிறேன். மறுபடியும் துணைக் கேள்வி கேட்கலாம் என்று சொல்லியிருக்கிறேன். சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. து. புருஷோத்தமன்: அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, அது அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலம் என்று கருதி ஆளுங்கட்சியினர் ஆக்கிரமித்தார்கள் என்று ஒத்துக் கொண்டார்கள்; அதற்காக நன்றி. ஆனால் அந்த நிலம் ஒரு கோவிலுக்குச் சொந்தமான— புராதனமான கோவிலுக்குச் சொந்தமான நிலம் என்று ஊருக்கெல்லாம் தெரியும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் காலிசெய்தாகி விட்டது என்று சொன்னார். நீங்கள் அதை இல்லை என்று மறுக்கிறீர்கள்ா? அது கோவில் நிலம் என்ற வரலாறு எல்லாம் தேவையில்லை. துணைக்கேள்வியைச் சுருக்கமாகப் போடுங்கள்.

திரு. து. புருஷோத்தமன்: அமைச்சர் சொன்னதற்கு நன்றி தெரிவிக்கவேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள்.

Amplifiers in temples

* Q. 10—Thiru S. M. VASAN: Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to State :

(a) Whether the Government are aware that amplifiers fixed at temples are a source of disturbance to worshippers, and

so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) திருக்கோயில் நிர்வாகத்தினர் பக்தர்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் ஒலியைக் குறைவாக வைத்து ஒலிபெருக்கியை பயன்படுத்து கிறார்கள். பொது மக்களிடம் இருந்தோ அல்லது பக்கதர்களிட மிருந்தோ புகார்கள் ஏதும் அறநிலையத் துறைக்கு வரவில்லை.

(ஆ) எனவே இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சீ. மு. வாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். பழனி முருகன் கோவிலில், ஐயப்பசுவாமி, வெங்கடாசலபதி போன்ற கடவுளர்களின் பாடல்களைப் போடுகிறார்கள். இதனால் அங்கு வருகின்ற பக்தர்கள் இந்தக் கோவிலுக்கு வருவதைவிட அந்தக் கோவில்களுக்குப் போயிருக்கக் கூடாதா என்ற சபலத் திற்கு ஆளாகின்றார்கள். அதே சமயத்தில் அந்தந்த ஆலயங் களில் உள்ள சமயத்தைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கப் படுமா?